அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RLTOP: 23/2024

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| ம.சா.1 | 06.03.2026 |
| பெயர் ரவிச்சந்திரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. என்ன பரிகாரம் கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டை காலிசெய்து தரவேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வாடகை ஒப்பந்தம் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாடகை ஒப்பந்தம் எழுத்துப்பூர்வமாக எதுவும் ஏற்படுத்தவில்லை என்றாலும் வாய்மொழியாக தான் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதை நிருபிக்கும் வகையில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. நான் முன்தொகை செக்கியூரிட்டி டெபாசிட்டாக ரூ30லட்சம் எந்த கணக்கில் பெற்று காட்டியுள்ளேன் என்றால் எனது கம்பெனி கணக்கில் பெற்று லீஸ்தொகை என்றே காட்டியுள்ளேன்.

2. நான் கூறும் கம்பெனி பெயர் விஜெய்பூர்னா ஸ்டாம்பிங்ஸ் ஆகும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே இருக்கும் பார்ட்னர்சிப் உறவு மற்றும் நிறுவன பணபரிமாற்றத்தை மறைப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் முன்தொகை செக்கியூரிட்டி டெபாசிட்டாக ரூ30 லட்சம் தரவில்லை என்றாலும் நிறுவனத்தில் பாட்னர்சிப்பாக மேற்படி தொகையை கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்கூறிய ரூ30 லட்சம் தவிர ரூ15 லட்சம் ரொக்கமாக என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மொத்தமாக ரூ45 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்றாலும் அதில் வரும் லாபத்தில் நான் எதிர்மனுதாரருக்கு பணம் தருகிறேன் என்று சொன்னேன் என்றாலும் அதுவரையில் மனு சொத்தில் தங்கிக்கொள்ளுமாறு சொன்னேன் என்றால் சரியல்ல.

3. பொதுவாக 10 மாதவாடகை தான் முன்தொகையாக பெறுவார்கள் என்றாலும் வாடகை தொகை ரூ3000 இருக்க நான் 1000 மடங்கு மாதவாடகையை முன்தொகையாக ரூ30 லட்சம் பெற்றுள்ளேன் என்றால் 3 வருட லீஸ்காக தான் ரூ30 லட்சம் எதிர்மனுதாரர் கொடுத்தார். மாதம் ரூ3000 மனுசொத்தின் மெயின்டனனஸ்காக கொடுத்தார். வாடகை கொடுத்ததற்காக வாடகை ரசீது எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ரூ3000 ரொக்கமாக தான் கையில் பெற்றுக்கொண்டேன். ரூ30 லட்சம் தொகையை நான் வருமானவரியில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன்.

4. மனுதாக்கல் செய்ததற்கு முன்பு எந்த தேதியில் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. அதற்கு எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரரை தொந்தரவு செய்யவேண்டும் என்பதற்காக

காவல்நிலையத்தில் 2 முறை புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவரை வீட்டில் இருந்து காலிசெய்வதற்காக தான் காவல்நிலையத்தின் உதவியை நாடினேன். ம.சா.ஆ 6 CSR ஆவணம் நான் கொடுக்காததால் அது இந்த வழக்கிற்கு சம்மந்தம் உடையது அல்ல என்றால் சரியல்ல. புகாரில் கொடுத்த மனுவை நிருபிக்கும் வகையில் வேறு ஆவணம் எதுவும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் வாடகைகாட்டும் எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

5. மொத்தமாக ரூ45 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்றாலும் அதில் வரும் லாபத்தில் நான் எதிர்மனுதாரருக்கு பணம் தருகிறேன் என்று சொன்னேன் என்றாலும் அதுவரையில் மனு சொத்தில் தங்கிக்கொள்ளுமாறு சொன்னேன் என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.